தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

# கடல் சார் தொல்லியல் பிரிவை புதுப்பிக்கும் திட்டம் உள்ளதா?

# திமுக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஒன்றிய அரசுக்கு கேள்வி

புதுடெல்லி, மார்ச் 27

இந்திய தொல்லியல் ஆய்வுத் துறையின் (ஏஎஸ்ஐ) கடல் சார் தொல்லியல் பிரிவை (யுஏபுள்யு) புதுப்பிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா என்று ஒன்றிய அரசுக்கு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன் கேள்வி எழுப்பினார்.

**இது குறித்து மக்களவையில் கடந்த 27ஆம் தேதி மக்களவையில் அவர் எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு.**

இந்திய தொல்லியல் ஆய்வுத் துறையின் கடல்சார் தொல்லியல் பிரிவைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா? அவ்வாறு திட்டம் ஏதும் இருப்பின் அதைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். அத்தகைய திட்டம் ஏதும் இல்லை எனில் அதற்கான காரணங்களைத் தெரிவிக்க வேண்டும்.

கடல் சார் தொல்லியல் திட்டத்தின் விவரங்களையும் அதற்கான ஆய்வுகளைப் பற்றி விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதிகளில் நடத்தப்பட்ட தொல்லியல் ஆய்வு உத்தேசத் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்கியுள்ளதா? அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அதைப்பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

**திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பி கேள்விக்கு ஒன்றிய அரசின் கலாச்சாரம், சுற்றுலா மற்றும் வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஜி.கிஷன் ரெட்டி அளித்த பதில் விவரம் வருமாறு.**

கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் இந்திய தொல்லியல் ஆய்வுத்துறையில் கடல் சார் தொல்லியல் பிரிவு செயல்பட்டு வருகிறது. இந்திய தொல்லியல் ஆய்வுத் துறையின் தலைமையகத்தில் உதவி தொல்லியல் துறை நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார். குறிப்பாக கடல்சார் தொல்லியல் ஆய்வுப் பணிகளைக் கவனிப்பதற்காக அவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

காவிரி டெல்டா பகுதிகளில் தொல்லியல் ஆய்வு தொடர்பான உத்தேச திட்டங்கள் ஏதும் பரிசீலனையில் இல்லை.

******